### விஜயலெட்சுமி குடும்பத்தினருக்கு

# ரிம.30 ஆயிரம் கருணைத் தொகை

## டத்தோ பண்டார் உறுதிப்படுத்தினார்



கோலாலம்பூர், செப். 7-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நில அமிழ்வின் காரணமாக ஏற்பட்ட பெரிய குழியில் விழுந்த விஜயலெட்சுமியின் குடும்பத் தினருக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் சார்பாக 30 ஆயிரம் ரிங்கிட் கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளதை கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷரிஃப் உறுதிப்படுத்தியதாக ஆஸ்ட்ரோ அவானி செய்தி வெளியிட் டுள்ளது. விஜயலெட்சுமி குடும்பத்தினர் செப்டம்பர் 1ஆம் தேதி தங்கள் தாயகமான இந்தியாவுக்குத் திரும்பும் முன் ரொக்கமாக இந்தக் கருணைத்தொகை வழங்கப்பட்டுள்ளது.



பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

## விஜயலெட்சுமி...

இது இழப்பீடு கிடையாது. மாறாக, விஜயலெட்சுமி குடும்பத்திற்கு டிபிகேஎல் சார்பில் வழங்கப்படும் கருணைத் தொகை என்றார் அவர்.

இதற்கிடையே, இந்தியாவிற்குத் திரும்புவதற்கு முன்னதாக விஜயலெட்சுமி குடும்பத்தினருக்கு பல்வேறு தரப்பினர் நிதி உதவி வழங்கியதாக பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்திருந்தார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம், கார்ப்பரேட் குழுமங்கள் என பல தரப்பினர் அந்தக் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளனர் என்று அமைச்சர் கூறியிருந்தார்.

முன்னதாக ஆகஸ்டு 23ஆம் தேதி விஜயலெட்சுமி அந்தக் குழிக்குள் விழுந்தார். இதனை அடுத்து அவரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. பல்வேறு வியூகங்களைப் பயன்படுத்தி தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் அவர் கிடைக்கவில்லை.

இதனால் 9 நாட்களுக்குப் பிறகு தேடுதல் பணிகள் கடந்த சனிக்கிழமை நிறுத்தப்பட்டன. இதனை அடுத்து அவரின் குடும்பத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா திரும்பினர்.

அதேசமயம் கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் விஜயலெட்சுமி குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குவது குறித்து விவாதிக்கப்படும் என ஸலிஹா முஸ்தாபா தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது.

இருப்பினும், அந்த இழப்பீடு குறித்து அமைச்சரவை முடிவு குறித்து ஸலிஹா ஏதும் கூறவில்லை.